சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எ.சா.01 திரு.பிரபாகர் த /பெ திரு. பரமசிவம் , வயது . 48

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

.1. நான் பர்கூரில் குடியிருந்து வருகிறேன். எதிரி தயாளன் திருப்பத்தூரை சேர்ந்தவர் ஆவார். எதிரியை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் நானும் எதிரியும் ஒரே பள்ளியில் ஆசிரியர்ராக 2006–2012 பணியாற்றி வந்தோம். 2012 பின்பும் எதிரியுடன் எனக்கு பழக்கம் வழக்கம் இருந்ததா என்றால் 2012–2017 வரை நான் திருப்பத்தூரில் தங்கி வேலை செய்துவந்ததால். எதிரியுடன் பழக்கம் இருந்தது. எதிரியை எனக்கு 15 ஆண்டுகள் தெரியும் என்பதால் அவர் கடன் வாங்கிய விவரங்களும் தெரியும் என்றால் சரிதான். எதிரி கடன் வாங்கியது சம்மந்தமாக எதிரி மீது 4 காசோலைமோசடி வழக்குகள் உள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். ஒரு வழக்கில் எதிரி தண்டிக்கபட்டுள்ளார் என்றால் சரிதான். நானும் எதிரியும் சேர்ந்து ரூ.3 இலட்சம் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்ன என்றால் அந்த சமயத்தில் எனக்கும் பணம் தேவை இருந்ததால் இருவரும் சேர்ந்து கடன் வாங்கினோம். புகார்தாரரிடம் ரூ.3 இலட்சத்தை கடன் பெற்ற நாங்கள் அதில் என்னுடைய பங்கு என்ன என்றால் ரூபாய். 1 இலட்சம் ஆகும். நான் புகார்தாரருக்கு 5 காசோலைகள் கொடுத்தேனா என்றால் இல்லை. காளி என்வரிடம் தான் காசோலைகள் கொடுத்தேன். 5 காசோலைகளும் பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் என்றால் சரிதான். மேலும், பாண்டும், கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். நான் ஆசிரியராக பணியாற்றுவதால் 5 காசோலைகள் மற்றும் 2 பாண்டு கையொப்பம் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் அவர் கேட்டதால் கொடுத்தேன். ஏன் 5 காசோலைகள் மற்றும் 2 பாண்டுகள் வாங்குகிறிரீர்கள் என்று

நான் திரும்ப கேட்டேனா என்றால் இல்லை. நான் ரூபாய் 1 இலட்சம் எந்த தேதியில் வாங்கினேன் என்றால் தேதி எனக்கு நினைவில்லை. நான் ரூபாய் 1 இலட்சத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக கூறும் நிலையில் நான் திருப்பி கொடுத்த தேதியும் நினைவில்லை என்றால் சரிதான். காசோலைகள் மற்றும் பாண்டுகளை நான் திரும்ப பெற்றுக்கொண்ட தேதியும் எனக்கு நினைவில்லை என்றால் காசோலைகள் மற்றும் பாண்டுகளை நான் திரும்ப பெறவில்லை. பணம் மட்டும் திரும்ப கொடுத்துவிட்டு காசோலைகள் மற்றும் பாண்டுகளை திரும்ப வாங்காததற்கான காரணத்தை கூற இயலுமா என்றால் இயலாது. நான் கூறுவதுபோல் நானும் எதிரியும் சேர்ந்து கடன் பெறவில்லை என்றால் எதிரி ஆதரவாகா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரரிடம் இருந்து தான் கடனை பெற்றார் என்றாலும், தற்போது உண்மைக்கு மாறாக காளி என்பரிடம் கடன் பெற்றதாக பொய்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காளிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.1
Thirupattur.